செய்தி வெளியீடு எண்: 683 23.10.2007

# செய்தி வெளியீடு

முன்னாள் படைவீரர்களுக்கான தொகுப்புநிதியின் நிலையான உட்குழு கூட்டம் 23.10.2007 அன்று மாலை 3.30 மணிக்கு அரசு தலைமைச் செயலாளர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், திருமதி பி. சிவகாமி, இ.ஆ.ப., ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, டாக்டர். ஜே. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., கூடுதல் செயலாளர், நிதித்துறை, டாக்டர். ஆ. சித்தரஞ்சன் மோகன்தாஸ், இ.ஆ.ப., அரசு இணைச் செயலாளர், பொது (முன்னாள் படைவீரர்)த் துறை, ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில், போரில் ஊனமுற்றோருக்கு கருணைத் தொகை வழங்குதல், மறுமணம் புரிந்து கொண்ட போர் விதவையருக்கு வருடாந்திர பராமரிப்பு மானியம் தொடர்ந்து வழங்குதல், தொழிற்கூட மானியம் வழங்குதல் ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டு, மேதகு ஆளுநர் தலைமையிலான தொகுப்புநிதியின் மாநில மேலாண்மை குழுவிற்கு பரிந்துரை செய்யப்பட்டது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.